# யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை

# பரிசில் நாள் - 2019

இடம் :- பாடசாலை "செல்வ நாயகதேவி" அரங்கு

காலம் :- 11.09.2019 புதன்கிழமை

நேரம் :- பி.ப 2.00 மணி

## தலைமை

**திரு.ஆ.தங்கவேலு** அவர்கள்

(பாடசாலை முதல்வர்)

## முதன்மை விருந்தினர்

**திரு.வி.சு.துரைராஜா** அவர்கள்

(பழைய மாணவர், ஓய்வு நிலை கிராம அலுவலர்,

தலைவர் - உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் )


## பரிசில் வழங்குனர்

**திருமதி.இராஜேஸ்வரி துரைராஜா** அவர்கள்

# வரலாற்று ஆவணம்

## அமரர் அப்பா வெற்றிவேலு (ஆயுர்வேத வைத்தியர்)

## முகாமையாளர் : யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை



1890 களின் பிற்பகுதியில் அமெரிக்க மிஷனரியினால் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படும் இப்பாடசாலையில் கிறிஸ்தவ மத மாற்றம் காரணமாக மாணவர் தொகை குறைந்து சென்ற வேளை மிஷனரியிடமிருந்து 1930ம் ஆண்டு பாடசாலையைப் பொறுப் பேற்று அதன் முகாமையாளராக செயற்பட்டு பாடசாலையை வழிநடாத்தி 1940ம் ஆண்டு சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் (Hindu Board) பாடசாலையை கையளித்தார்

1960ம் ஆண்டு நாட்டிலுள்ள அனைத்து தனியார் பாடசாலைகளையும் அரசு சுவீகரித்த போது இப்பாடசாலையும் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. அமரர் அப்பா வெற்றிவேலு இப்பாடசாலையை மூடப்படாமல் காப்பாற்றியமையால் இன்றும் இப் பாடசாலை இயங்குகின்றது.

இவரது வாழ்க்கைக்காலம் 1900-1960 வரையானது என அவரது உறவினர் பேராசிரியர் கோபன் மகாதேவா அவர்கள் கூறுகின்றார்

நன்றி

# யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை

## பரிசில் நாள் – 2019

**காலம்** :– 11.09.2019 புதன்கிழமை பி.ப 2.00 மணி

**இடம்** :– பாடசாலை "செல்வநாயக தேவி" அரங்கு

### தலைவர்

**திரு. ஆ.தங்கவேலு அவர்கள்**
(பாடசாலை முதல்வர்)

### முதன்மை விருந்தினர்

**திரு. வி.சு.துரைராஜா அவர்கள்**
(பழைய மாணவர் ஓய்வு நிலை கிராம அலுவலர்,
தலைவர் - உலகத் தமிழர் பண்பாடு இயக்கம்)

### பரிசில் வழங்குனர்

**திருமதி. இராஜேஸ்வரி துரைராஜா அவர்கள்**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**பாடசாலைச் சமூகம்**

## இலட்சினை

## மகுட வாசகம்

"ஓதுவது ஒழியேல்"

## தூரநோக்கு (Vision)

பண்பொடு கல்வியும் கலையும் ஒழுக்கமும்
மிகுந்த நற்சமூகம் உருவாக

## பணிக்கூற்று (Mission)

ஆளுமை ஆரோக்கியம் உயர்ந்து விளங்கிட
கல்வியும் கலாசாரமும் இருகண்களாக

# பாடசாலைக்கீதம்

கைதடி நுணாவில் வித்தியசாலை
சீருடன் வாழியவே
கைதடி நுணாவில் கலங்கரை விளக்காய்
கலையகம் வாழியவே

(கைதடி நுணாவில்)

பத்தொன்பதாம் நூற்றாண்டதில் மலர்ந்து
பலர் மகிழக் கல்வி கலை வளர்த்து
சித்தி தரும் அறிவு வீரம் செல்வம் யாவும்
முத்தென நல்கும் அறிவாலயம் எங்கள்

(கைதடி நுணாவில்)

சமயம் கணிதம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம்
புவியியல் அழகியல் மனையியல் குடியியல்
விவசாயம் வரலாறு தொழில்நுட்பம் சுகாதாரம்
விளையாட்டிலும் வெற்றி மேம்படச் செய்திடும்

(கைதடி நுணாவில்)

பண்பொடு பழக்கமும் பல நமக்களித்து
அன்பொடு அருளும் ஒழுக்கமும் ஊட்டி
மண்மிசை மக்களின் மதிப்பினைச் சேர்த்திங்கே
இன்புடையோராய் இனிதெமை ஆக்கிடும்

(கைதடி நுணாவில்)

# நிகழ்ச்சி நிரல்

1. மங்கல விளக்கேற்றலும் இறைவணக்கமும்

2. தேசியக் கொடியேற்றல்

3. பாடசாலைக் கொடியேற்றல்

4. வரவேற்பு நடனம்

5. வரவேற்புரை

6. பரிசில் நாள் அறிக்கை

7. பரிசில் வழங்கல்

8. விருந்தினர் கௌரவிப்பு

9. விருந்தினர் உரை

10. கலை நிகழ்வுகள்

11. நன்றியுரை

12. கொடியிறக்கம்

# யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை
# பரிசில் நாள் அறிக்கை – 2019

எமது பாடசாலையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பரிசில் நாள் நிகழ்விற்கு எமது அழைப்பை ஏற்று முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய திரு. வி.சு.துரைராஜா அவர்களே! அவர் தம் பாரியார் திருமதி. இராஜேஸ்வரி துரைராஜா அவர்களே!

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக் கல்விப் பணிப்பாளர்களே! கோட்டக் கல்விப்பணிப்பாளர் அவர்களே! முதன்மை ஆசிரியர்களே! அயற்பாடசாலை அதிபர்களே! ஆசிரியர்களே! கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே! எமது பிரதேச வைத்தியர்களே! ஓய்வு பெற்ற அதிபர்களே! ஓய்வு பெற்ற ஆசிரியர்களே! முன்பள்ளி ஆசிரியர்களே! பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே! அன்புசார் எனது பாடசாலையின் ஆசிரியர்களே! மாணவ மணிகளே! பழைய மாணவர்களே! கல்விசார ஊழியரே! தங்கள் அனைவருக்கும் எமது அன்பான இந்நேர வணக்கங்கள் இன்றைய பரிசில் நாளில் தங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்பதில் நாம் பெரு மகிழ்வடைகின்றோம்.

## முதன்மை விருந்தினர் அவர்களே!

தாங்கள் இப்பாடசாலையில் ஆரம்ப வகுப்புக்களைக் கற்று இடைநிலை, மற்றும் உயர் கல்விக்காக வேறு பாடசாலை நாடிச் சென்றீர்கள் அப்படி நீங்கள் இடைநிலைக் கல்விக்காக வேறு பாடசாலை சென்றாலும், பின்னர் அரச சேவையில் பணிபுரிந்த போதும் தற்போது புலம் பெயர் நாட்டில் வசித்தாலும் தங்களுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டிய பள்ளியை என்றுமே மறந்ததில்லை இப் பாடசாலையின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் தங்களின் பணி, பங்கு அளப்பரியது.

2012ம் வருடம் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் தேவை எப்படி வேண்டுவது என்று நாம் சிந்தித்த போது மறைந்த உங்களது ஆருயிர் நண்பர் அமரர் ஜீவகதாஸ் அவர்கள் "என்னிடம் நீங்கள் காணியைக் கண்டு பிடியுங்கள் அதற்குரிய பணத்தை திரு. V.S.துரைராஜாவிடம் நான் பெற்றுத் தருகிறேன்" என்றார் அவர் கூறியபடி கனடா நாட்டிலிருந்து தான் முதல் முதல் காணி வேண்டும் போது 1000 000/= நிதி கிடைத்தது. ஏனைய எமது புலம் பெயர் பழைய மாணவர்களும் நிதியை அனுப்பியிருந்தார்கள் இருந்தாலும் முதல்

பிள்ளையார் சுழி போட்டு இப்பணியில் நாம் ஈடுபட எமக்கு துணிவையும் தென்பையும் ஏற்படுத்தியவர் திரு. V.S.துரைராஜா அவர்களே அத்தோடு நில்லாமல் நான்கு கட்டங்களாக இக்காணியை நாம் வேண்டியிருந்தோம் இப்பணியை தொடக்கியும் வைத்து இறுதியில் கடந்த பெப்ரவரிமாதம் வேண்டிய 6 பரப்புக்காணிக்காக தனது நிதியில் 500000/= வை தந்து இக்காணிக் கொள்வனவுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் நூற்றாண்டு பழமை வாய்ந்த பாடசாலை 4 பரப்புக்காணியுடன் 110 வருடங்கள் இயங்கியுள்ளது. இன்று 21 பரப்புக் காணியுடன் கலையரங்கு, மதில், சரஸ்வதிசிலை என்பவற்றுடன் செழிப்புப் பெறுகிறது. இதற்கெல்லாம் காரணம் திரு. V.S.துரைராஜாவைப் போன்று நல்லுள்ளம் படைத்த பலர் எம்மோடு கைகோர்த்துள்ளார்கள் அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இவர் திகழ்ந்துள்ளார் ஊரில் அரசபணி புரிந்தபோது பாதி நேரத்தை பொதுப்பணிக்காகச் செலவிட்ட பெருந்தகை இவர் அத்தோடு நிற்கவில்லை புலம் பெயர் தேசத்தில் இருந்து தனது முழு நேரத்தையும் பொதுப்பணிக்காகச் செலவிடும் ஒருவராக இவரை நாம் பார்க்கின்றோம்.

இவ்வாறான ஒருவரை பாடசாலையின் நிகழ்வு ஒன்றுக்கு அழைத்து பெருமைப்படுத்த வேண்டும் என எமது பாடசாலைச் சமூகம் விரும்பியது இம்முறைதான் அதற்கான காலமும், நேரமும் சரியாக எமக்கு வந்தமைந்தது. எனவே அந்த வகையில் இன்றைய நாளில் இப்பரிசில் நிகழ்வில் தம்பதிகளாக வருகை தந்து கலந்து கொள்வது எமக்குப் பெருமை தருகிறது அத்துடன் கடந்த யூலை மாதம் பாடசாலையில் நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கள் திருக்கரங்களால் தாங்களே பரிசினை வேண்டி மாணவர்களுக்கு வழங்கவுள்ளீர்கள் அதற்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக. மேலும் தங்களது பொதுப்பணி சிறக்க வாழ்த்துக்கள்.

பரிசில் வழங்குவதற்காக எமது அழைப்பை ஏற்று வருகை தந்த திருமதி. இராஜேஸ்வரி துரைராஜா அவர்களே தாங்கள் இப் பாடசாலையில் கல்வி கற்காவிட்டாலும் தங்கள் கணவரூடாக இப் பாடசாலையின் வளர்ச்சியில் கவனத்தை ஈர்த்துள்ளீர்கள் பொதுச் சேவைக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த தங்கள் கணவரது பணிவிடைகளை தாங்கள் சிறப்பாகச் செய்கின்றீர்கள் உங்களது செயற்பாடுதான் திரு. V.S.துரைராஜாவை பொதுப்பணியில் உத்வேகம் கொள்ளவைக்கிறது என்றால் அது மிகையாகாது. உங்கள் இருவரதும் ஆயுள் நீடிக்க இறைவனை வேண்டுகின்றோம்.

# கல்வி அபிவிருத்தி

எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்தியைக் கருத்தாகக் கொண்டு தன்னலமற்ற சேவையினை அயராது நல்கும் ஆசிரியப் பெருந்தகைகள் பாராட்டுதற்குரியவர்களே. ஆசிரியர்களது சேவையின் மேன்மையை மாணவர்களின் கல்வித் தரம் உயர்வாக வெளிப்படுவதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக 2013ம் ஆண்டு தொடக்கம் Home work club செயற்றிட்டத்தின் மூலம் கற்றலில் பின்னடைவான மாணவர்களுக்கான மேலதிக பயிற்சி வகுப்புக்கள் இப்பிரதேச ஆசிரியர்களின் கற்பித்தல் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்துடன் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான மேலதிக பயிற்சி வகுப்புக்கள் பயிற்சிப் பரீட்சைகள் அடைவு மட்டம் குறைந்தவர்களுக்கான மேலதி வகுப்புக்கள் என்பன அதற்குரிய ஆசிரியப் பெருந்தகைகளால் தொடர்ந்தேர்ச்சியாக திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2018ல் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 16 மாணவர்கள் தோற்றி வி. பிரவணன் -168 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இத்துடன் 10 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளமை பாராட்டிற்குரியதாகும்.

கல்விச் செயற்பாட்டின் உயர்வாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10 மாணவர்கள் தோற்றி 07 மாணவர் க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளமை பாராட்டிற்குரியதாகும். ரா.ராகவன் கணிதப் பிரிவிலும் சோ.அபிசன், பா.சிந்துஜா வர்த்தகப் பிரிவிலும், மா.மகிழினி, ந.ஜெஸ்னிகா, க.நிவேதன், பு.சிந்துசா ஆகியோர் கலைப்பிரிவிலும் கல்வி கற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் – 2018

எமது பாடசாலை மாணவர்கள் கற்றலில் மட்டுமன்றி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் வெற்றி பெற ஊக்குவிக்கப்படுகின்றனர்.

2018ம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு ஒன்றில் செல்வி சு. சந்தோசனா பாவோதல் போட்டியில் 3ம் இடத்தை பெற்றுள்ளார் வலயமட்டத் தகவல் தொழில்நுட்பப் போட்டியில் தரம் - 5 வி.பிரவணன் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார் வலயமட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் தரம் 6ஐ சேர்ந்த இ.கிருத்திகன் தேர்ச்சி பெற்றுள்ளார்.

ஆரம்பப் பிரிவு செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் குழு நிலையில் தரம் மூன்றைச் சேர்ந்த மாணவர்கள் 3ம் இடத்தை பெற்றுள்ளனர் அத்தோடு ஆரம்பப்பிரிவு தரம் - 5 மாணவர்கள் சிறுவர் நாடகப் போட்டியிலும் பங்கு பற்றி வெற்றியீட்டியுள்ளமை பாராட்டுதலுக்குரியதாகும்.

"நூல்களாகிய தோழர்களே தேசமிகு நண்பர்கள்" என்னும் தலைப்பின் கீழ் நடைபெற்ற கதை விமர்சன முன்வைப்பு போட்டியில் மாகாண மட்டத்தில் தரம் ஒன்பதைச் சேர்ந்த மாணவி அ.சாருணி பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளார். கதை விமர்சனம் எழுத்தாக்கப் போட்டியில் தரம் எட்டைச் சேர்ந்த சி.சாரங்கன், து.சயிந்தா ஆகியோர் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்று பாடசாலைக்கு பெரும் புகழை சேர்த்துள்ளனர்.

2018ம் ஆண்டு நடைபெற்ற புத்தாக்கப் போட்டியில் மா.ஜெனுசியன், பி.கோபிராம், ம.ஜெகபரன், அ.டில்றுக்ஷன், ச.கௌரீசன், ப.அக்ஷயன், இ.கிருத்திகன், ரா.ராகவன், ந.ஜெஸ்ரீன் ஆகிய ஒன்பது பேரும் மாகாணமட்டப் போட்டியில் பங்கு பற்றி சான்றிதழ்களை பெற்றுள்ளனர் என்பதுடன் மா.ஜெனுசியன் தேசியமட்டத்தில் பங்குபற்றி பரிசில்களையும் பாராட்டையும் பெற்றுள்ளார்.

வண்ணை சாந்தையர் மடம் சமய அறிவுப் போட்டியில் நா.சங்கர்ராஜ், சி.அபிதா, மா.ஜெனுசியன் முதலாம் இடத்தையும் செ.செங்கயல் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார் தொடர்ந்து நடைபெற்ற திருநாவுக்கரசநாயனார் குருபூசை தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட தேவார மனனப் போட்டியில் சி.ஸ்ரெல்லா, சு.சுமணன் ஆகியோர் முதலாம் இடத்தை பெற்று சிறப்புப் பரிசினை பெற்றுள்ளார்கள். திருஞானசம்பந்தர் குருபூசை தினத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் சி.ஸ்ரெல்லா, சு.தனோஜன் முதலாம் இடத்தைப் பெற்று சிறப்புத்தேர்ச்சி பெற்றுள்ளனர். சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் த.கஜான்சி, ந.டிகாஷ், ஜெ.குகப்பிரியா, ஜெ.திபிஷா சிறப்புத்தேர்ச்சி பெற்றுள்ளனர்.

வலயமட்ட மெய்வல்லுனர் போட்டியை நோக்கும் போது குண்டு போடுதலில் து.சயிந்தா 1ம் இடத்தையும் சட்டவேலி பாய்தலில் நி.றதீபா 1ம் இடத்தையும் நீளம் பாய்தலில் ர.மகிந்தன் 1ம் இடத்தையும் பெண்கள் பிரிவில் பா.சிந்துஜா 2ம் இடத்தையும் ஈட்டி எறிதலில் ர.மகிந்தன் 2ம் இடத்தையும் 200m, 100m ஓட்டத்தில் பா.சிந்துஜா 1ம் இடத்தையும் பெற்றுள்ளமை பாராட்டுதலுக் குரியதாகும்.

மெய்வல்லுனர் போட்டி மாகாணமட்டத்தில் ர.மகிந்தன் நீளம் பாய்தலில் 2ம் இடத்தையும் ஈட்டிஎறிதலில் 4ம் இடத்தையும் பெற்றுள்ளார் து.சயிந்தா குண்டு போடுதலில் 4ம் இடத்தையும் நி.றதீபா சட்டவேலி பாய்தலில் 5ம் இடத்தினையும் பெற்றுள்ளார்கள்.

பாடசாலை செயற்பாட்டை நோக்கும் போது வலயமட்டத் தோட்டப் போட்டியில் எமது பாடசாலை 3ம் இடத்தை பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடாத்தப்பட்ட டெங்கு அற்ற பாடசாலை போட்டியில் 1ம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றுள்ளது அத்தோடு தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் பங்குபற்றி மெச்சுரை சான்றிதழ் பெற்றமை பாராட்டுதற்குரியதாகும்.

வெளிவாரி மதிப்பீட்டில் வகைII பாடசாலைகளில் பாடசாலைக் கல்வி பண்புத்தரச் சுட்டியில் முதன்மை நிலை பெற்றதை கௌரவித்து மாகாணக் கல்வித்திணைக்களத்தால் விருது வழங்கப்பட்டது இத்தனை வெற்றிகளும் குறைந்த வளத்துடன் கிடைத்த பெரு வெற்றிகளாகும்.

பாடசாலையின் பௌதீக வளவிருத்தி கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளின் பெறுபேறாக 2018ஆம் ஆண்டின் சிறந்த அதிபருக்கான "பிரதீபா பிரபா" விருதிற்காக எமது பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## மன்றங்கள் கழகங்கள்

மாணவர்களது கல்விச் செயற்பாட்டினை மேன் மேலும் வளர்த்தெடுக்கும் வகையில் மன்றங்கள், கழகங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஆரம்பப்பிரிவு மன்றம், இந்து மன்றம், தமிழ் இலக்கிய மன்றம், ஆங்கில மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், சுகாதார மன்றம், கணித விஞ்ஞான மன்றம் ஆகிய மன்றங்களும் சக்தி வளக்கழகம் சுற்றாடல் முன்னோடிக் கழகம் என்பனவும் சிறப்பாக இயங்கி வருகின்றது.

இம் மன்றங்கள் மாணவர்களது அறிவு, திறன், தலைமைத்துவப் பண்பு, ஒற்றுமை, தலைமைத்துவத்திற்கு கீழ்படிதல் போன்ற பல்வேறு பண்புகளை மாணவர் மத்தியில் வளர்த்தெடுக்கப் பெரிதும் துணைபுரிகின்றன.

## 2019 பாடசாலையின் அபிவிருத்திப்பணிகள்

1. 6 பரப்புக்காணி 1800 000/= செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (பழைய மாணவர் சங்கநிதி)

2. "கம்பரெலிய" வேலைத்திட்டத்தில் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்களின் 1000 000/= நிதி ஒதுக்கீட்டில் 93 மீற்றர் நீளமான மதில் அழகிய வேலைப்பாடுகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

3. திறன் வகுப்பறை (smart class room)க்குரிய உபகரணங்கள் 400 000/= செலவில் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதியை கிராமிய உட்கட்டமைப்பு நிதி (RIDP)யிலிருந்து கௌரவ ஈஸ்வரபாதம் சரவணபவன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் வழங்கியிருந்தார்.

4. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 100 000/= நிதியினை கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் அவர்கள் ஒதுக்கித்தந்து நிழற்படப்பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. இதன் பற்றாக்குறை நிதியினை பெற்றோர், பழையமாணவர் திரு. திருமதி ஜெயக்குமார் தம்பதியினர் வழங்கியிருந்தனர்.

5. அமைக்கப்படும் சரஸ்வதிசிலை எதிர்வரும் நவராத்திரி தினத்தில் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு 400 000/= ஆகும். இதனை எமது பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் அமரர் த. குமாரசுவாமி ஞாபகார்த்தமாக அவரது புதல்வி திருவாட்டி அகிலேஸ்வரி குமாரசுவாமி அவர்கள் அமைத்துத் தருகின்றார்.

## பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கும் நிதி உதவிகள் - 2019

| உதவுபவர் | நிதி | மாணவர்கள் |
|---|---|---|
| கனடா வாழ் மட்டுவில் நலன்புரிக்கழகம் | 500/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம் | து. சயிந்தா<br>ஜீ. டல்சிகா<br>அ. அபிநயா<br>ஜெ. திலக்சனா<br>சி. சாரங்கன் |
| வர்த்தகர் சங்கம் சாவகச்சேரி | 500/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம் | கு. நிசோன்<br>பா. கிருஸ்வீன்<br>ம. சகானா |
| ஏஞ்சல் பரடைஸ் சமூகநிறுவனம் கைதடி நுணாவில் | 5000/=மாதாந்தம்<br>3000/=மாதாந்தம்<br>500/=மாதாந்தம் | ரா.ராகவன்- 2021A/L Maths CHC<br>பா.சிந்துஜா- 2021 A/L Com CHC<br>பா.கிருஸ்வீன் |
| சிறுவர் அபிவிருத்தி நிதியம் யாழ்ப்பாணம் | 3000/=தவணைக்கு | பா. சிந்துஜா<br>2021 A/L வணிகம் CHC |
| திருமதி வி.துசிக்கா | 2000/=மாதாந்தம் | ந. சங்கவிதன்<br>(2020 க.பொ.த. உ/த,CHC) |
| ஆலமரம் சுவிஸ் கொடையாளர்கள் | 500/=மாதாந்தம் | பா. மதுமிதா |
| தென்மராட்சி அபிவிருத்தி கழகம் | 2000/=மாதாந்தம் | நி. றதீபா |
| திரு. மாசிலாமணி திருமமனி சுவிஸ் கொடையாளர் | 2000/=மாதாந்தம் | நி. அஸ்வினி |
| தியாகி அறக்கொடை நிதியம் | 500/=மாதாந்தம் | 20 மாணவர்கள் பெறுகின்றனர் |
| பழைய மாணவர் சங்கநிதியம்<br>திரு.தவேந்திரன் சந்தோஷ் | 1500/=மாதாந்தம்<br>900/=மாதாந்தம் | பா. பர்ஷனா<br>சு. பாவினியன் |
| பழைய மாணவர் சங்க நிதியம் | 2000/=மாதாந்தம்<br>துவிச்சக்கரவண்டி | சி. குசந்தன்<br>க.பொ.த.(உ/த) 2020 வர்த்தகம்<br>யா/மீசாலை வீரசிங்கம் ம.க. |
| அமரர் த.குமாரசுவாமி (முன்னைநாள் அதிபர்) புலமைப்பரிசில் நிதி 50000/= வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. 2020 முதல் கற்றலில் முன்னேற்றமுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும். | | |

## ஆசிரியர் விபரம் – 2019

| இல | ஆசிரியர் பெயர் | தரம் |
|---|---|---|
| 01 | திரு. ஆறுமுகம் தங்கவேலு | SLPS - 2 II |
| 02 | திருமதி. சிவமலர் நாகலிங்கம் | SLTS - 1 |
| 03 | திருமதி. குணமதி சிவநாதன் | SLTS - 1 |
| 04 | திருமதி. யோகேஸ்வரி சிவானந்தன் | SLTS - 1 |
| 05 | திருமதி. ஜெயந்தினி விநாயகமூர்த்தி | SLTS - I |
| 06 | திருமதி. கயல்விழி உதயசந்தர் | SLTS - I |
| 07 | திருமதி. கலைமகள் சியாம்சுந்தர் | SLTS - I |
| 08 | திருமதி. ஆதிரை சர்வேந்திரன் | SLTS - I |
| 09 | திருமதி. வசந்தகுமாரி தவானந்தம் | SLTS - I |
| 10 | திருமதி. நளினிகலா தவராசா (பகுதிநேரம்) | SLTS - I |
| 11 | திரு. பொன்னுச்சாமி இராசேந்திரா(பகுதிநேரம்) | SLTS - I |
| 12 | திருமதி. மகிந்தினி சுகந்தன் | SLTS - 2 I |
| 13 | திருமதி. சந்திரலதா நிமலரங்கன் | SLTS - 2 I |
| 14 | திருமதி. நந்தினி சர்மிலன் | SLTS - 2 I |
| 15 | திருமதி. செல்வநிதி தனபாலசிங்கம் | SLTS - 2 I |
| 16 | திருமதி. தவமலர் பஞ்சலிங்கம் | SLTS - 2 I |
| 17 | செல்வி. வைரமுத்து ஞானகௌரி | SLTS - 2 II |
| 18 | திருமதி. அனோஜியா முரளீதரன் | SLTS - 2 II |
| 19 | திருமதி. ஸர்மினி கணேஸ்வரன் | SLTS - 2 II |
| 20 | திரு. அரியரட்ணம் திவ்யராஜ் (பகுதி நேரம்) | SLTS - 2 II |
| 21 | திருமதி. நிறஞ்சினி யோகசீலன் (பகுதிநேரம்) | SLTS - 3 I |
| 22 | திருமதி. சுகந்தனி செந்தில்குகன் (இணைப்பு) | SLTS - 2 II |

திரு. கோபாலன் கணதீபன் - விளையாட்டு பயிற்றுவிப்பாளர்

கல்வி சாரா ஊழியர் - திரு. கார்த்திகேசு சுதாகரன் - III

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

1. திருமதி ஜெயந்தி பரம்சோதி - ஆரம்பக்கல்வி
2. திருமதி பவநீதராணி விக்னேஸ்வரன் - ஆரம்பக்கல்வி

## தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றோர் விபரம் – 2018

| மாணவர் பெயர் | தரம் | செயற்பாடு |
|---|---|---|
| 1. து. சயிந்தா | 08 | கதை விமர்சனம் - நூலகம் |
| 2. ஸ்ரீ. சாரங்கன் | 08 | கதை விமர்சனம் - நூலகம் |

## மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றோர் விபரம் – 2018

| மாணவர் பெயர் | தரம் | செயற்பாடு |
|---|---|---|
| 1. மா ஜெனுாசியன் | 7 | இளம் புத்தாக்குநர் கழகப் போட்டி |
| 2. அ. சாருணி | 9 | கதை விமர்சனம் முன்வைப்பு - நூலகம் |
| 3. ர. மகிந்தன் | 9 | நீளம் பாய்தல் - 2ம் இடம் |

## மாணவர் விபரம் – 2019

| பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆரம்பப்பிரிவு | 32 | 32 | 64 |
| இடைநிலைப்பிரிவு | 31 | 37 | 68 |
| மொத்தம் | 63 | 69 | 132 |

## பரீட்சைப் பெறுபேறு

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு

| ஆண்டு | தோற்றியோர் தொகை | சித்திபெற்றோர் தொகை | வெட்டுப் புள்ளிக்கு மேல் |
|---|---|---|---|
| 2015 | 13 | 11 | 03 |
| 2016 | 12 | 11 | 03 |
| 2017 | 14 | 13 | 02 |
| 2018 | 16 | 10 | 01 |

## க.பொ.த (சா/த)ப் பெறுபேறு

| ஆண்டு | தோற்றியோர் தொகை | சித்தி பெற்றோர் தொகை |
|---|---|---|
| 2014 | 11 | 06 |
| 2015 | 11 | 08 |
| 2016 | 08 | 04 |
| 2017 | 07 | 05 |
| 2018 | 10 | 07 |

## நன்றிகள்

இன்றைய பரிசில் நாள் நிகழ்வு சிறக்க மாணவர்களுக்கான பரிசுப் பொருட்களை வழங்கி உதவிய எமது பாடசாலையின் பழைய மாணவர்களும் பிரபல தொழிலதிபருமான திரு.திருமதி. சுபாஸ்கரன் அனுசியா குடும்பத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றிகள் இத்துடன் திருக்குறள் மனனப் போட்டிக்கான பரிசில்களை வழங்கியுதவும் திரு. V.S.துரைராஜா குடும்பத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

அவ்வாறே இன்றைய நிகழ்வின் பல்வேறு தேவைகளுக்கு நிதியுதவியை வழங்கியும் ஒலியமைப்பினை வழங்கிய பழைய மாணவர்களுக்கும் பந்தல் சேவையை வழங்கிய திரு.பொ.தேவராசா பந்தல் சேவையினருக்கும் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்றைய எமது பரிசில் நாள் நிகழ்விற்கு எமது அன்பான அழைப்பை ஏற்று எத்தனையோ சிரமங்களின் மத்தியிலும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் விருந்தினர்கள், வலயக்கல்வி அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், தென்மராட்சி வலயப்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் எமது பிரதேச வைத்தியர்கள், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், சனசமூக நிலைய உறுப்பினர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் பெற்றோர், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், கல்விசாரா ஊழியர்கள் உங்கள் அனைவருக்கும் இந்த நன்நாளிலே பாடசாலைச் சமூகம் சார்பாக எமது மனமார்ந்த நன்றிகள்

நன்றி

பாடசாலை சமூகம்

## தரம் – 01 – 2019

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. ச. லக்ஸ்வின் | பொதுத்தேர்ச்சி |
| 2. ப. ஹவிஷன் | பொதுத்தேர்ச்சி |
| 3. ஜெ. அகிசன் | பொதுத்தேர்ச்சி |
| 4. ந. துபிசாந் | பொதுத்தேர்ச்சி |
| 5. ந. சஸ்வித் | பொதுத்தேர்ச்சி |
| 6. ப. அப்ஷரன் | பொதுத்தேர்ச்சி |
| 7. கு. கிரிஷோன் | பொதுத்தேர்ச்சி |
| 8. சு. கம்சிகன் | பொதுத்தேர்ச்சி |
| 9. சி. அக்ஷயா | பொதுத்தேர்ச்சி |
| 10. க. டனுஸ்ஹா | பொதுத்தேர்ச்சி |
| 11. சு. சுவேனிகா | பொதுத்தேர்ச்சி |
| 12. பி. பிரவீனா | பொதுத்தேர்ச்சி |
| 13. ச. அக்ஷயா | பொதுத்தேர்ச்சி |
| 14. வி. விதுசா | பொதுத்தேர்ச்சி |
| 15. பா. தக்ஷிகா | பொதுத்தேர்ச்சி |
| 16. க. கிவிஷனா | பொதுத்தேர்ச்சி |

## தரம் – 01 – 2018

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. நி. அகல்யன் | பொதுத்தேர்ச்சி |
| 2. சு. தனோயன் | பொதுத்தேர்ச்சி, கற்பகவிநாயகர் தேவார மனனம் |
| 3. சு. சுமணன் | பொதுத்தேர்ச்சி, ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம், சிறப்புத் தேர்ச்சி |
| 4. சி. கஸ்வின் | பொதுத்தேர்ச்சி |
| 5. சி. டிஷான் | பொதுத்தேர்ச்சி |
| 6. நா. கோகுலப்பிரசாத் | பொதுத்தேர்ச்சி, ஸ்ரீகற்பக விநாயகர் தேவாரமனனம் |
| 7. ப. புவிஷன் | பொதுத்தேர்ச்சி |
| 8. நஜாத் | பொதுத்தேர்ச்சி |
| 9. க. ரெயிஹட் மக்ஸ்வெல் | பொதுத்தேர்ச்சி |
| 10. ச. நிஷானா | பொதுத்தேர்ச்சி |
| 11. ஜெ. தமிழ்ப்பிரியா | பொதுத்தேர்ச்சி |
| 12. க. ஹண்சிகா | பொதுத்தேர்ச்சி, ஸ்ரீகற்பக விநாயகர் தேவாரமனனம் |
| 13. சு. யொய்னா | பொதுத்தேர்ச்சி |
| 14. கி. ஸ்ரெலா | பொதுத்தேர்ச்சி, ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம், சிறப்புத் தேர்ச்சி, நூலக வாசிப்பு |
| 15. கி. ஜெஸ்மிகா | பொதுத்தேர்ச்சி |

**தரம் – 02**

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. ர. ரஜிகரன் | பொதுத்தேர்ச்சி |
| 2. ஜீ. லபிசாந் | பொதுத்தேர்ச்சி, செயற்பட்டு மகிழ்வோம், ஸ்ரீகற்பக விநாயகர் தேவார மனனம் நூலக வாசிப்பு |
| 3. ச. சானுஜன் | பொதுத்தேர்ச்சி, செயற்பட்டு மகிழ்வோம் |
| 4. தா. தன்சிகன் | பொதுத்தேர்ச்சி, நூலக வாசிப்பு ஸ்ரீகற்பக விநாயகர் தேவார மனனம் |
| 5. ச. சரணியா | பொதுத்தேர்ச்சி |
| 6. ஜெ. கவிப்பிரியா | பொதுத்தேர்ச்சி, ஸ்ரீகற்பக விநாயகர் தேவார மனனம் |
| 7. அ. அக்சயா | பொதுத்தேர்ச்சி |
| 8. ச. கம்சிகா | பொதுத்தேர்ச்சி |
| 9. ர. அனுஜா | பொதுத்தேர்ச்சி |
| 10. கி. பிரேன்சியா | பொதுத்தேர்ச்சி |

**தரம் – 03**

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. சி. ஸோபிதன் | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல் செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 03 ஆம் இடம் |
| 2. ந. டிகாஸ் | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் - குழு 3ஆம் இடம், சிறி கற்பக விநாயகர் தேவார மனனம் - சிறப்புத் தேர்ச்சி |
| 3. ஸ்ரீ. நிதுன்ஜன் | செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு 3 ஆம் இடம் |
| 4. ஸ். சபிக்ஷன் | கணிதம், சுற்றாடல், செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு 3ஆம் இடம் |
| 5. சி. அக்சயா | சமயம், செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 3ஆம் இடம் |
| 6. இ. அருஸ்ரிகா | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 3ஆம் இடம் |
| 7. கா. கம்சிகா | செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 3ஆம் இடம் |
| 8. த. கஜான்சி | கணிதம் சுற்றாடல், ஆங்கிலம், தமிழ், சமயம், நூலகம் - வாசிப்பு 2ஆம் இடம், ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம் - சிறப்புத்தேர்ச்சி, செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 3ஆம் இடம் |

| | |
|---|---|
| 9. இ. டன்சியா | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், நூலகம் வாசிப்பு - 3ஆம் இடம் ஸ்ரீ கற்பக விநாயகர் தேவாரம் மனனம் - சிறப்புத் தேர்ச்சி செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம்- 3ஆம் இடம் |
| 10. வி. கம்சிகா | செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 3ஆம் இடம் |
| 11. நி. நிலானி | செயற்பட்டு மகிழ்வோம் வலயமட்டம் குழு - 3ஆம் இடம் |
| 12. சா. சாதனா | இணை பாடம் |

**தரம் – 04**

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. செ. பத்மஜன் | தமிழ், சமயம், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் |
| 2. செ. செங்கயல் | தமிழ் கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், நூலகம் - பேச்சு, ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம் - சிறப்புத்தேர்ச்சி |
| 3. ஜெ. குகப்பிரியா | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், நூலகம் - பேச்சு, ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம் சிறப்புத்தேர்ச்சி |
| 4. ஜெ. திபிஷா | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம் - சிறப்புத்தேர்ச்சி |
| 5. அ. அபிசன் | தமிழ், சுற்றாடல், சமயம் |
| 6. ச. கஸ்மிதன் | தமிழ் |
| 7. கு. நிஷோன் | சமயம் |
| 8. றி. கிஷான் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 9. பி. பிரதீப் | இணைபாடவிதானம் |
| 10. த. கபில்ராஜ் | வரவொழுங்கு |
| 11. ர. மேரிஜெறின்சனா | இணைபாடவிதானம் |

**தரம் – 05**

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. பா. கிருஸ்வீன் | கணிதம், சுற்றாடல், புலமைப்பரிசில் சித்தி |
| 2. நா. சங்கர்ராஜ் | கணிதம், புலமைப் பரிசில் சித்தி, ஸ்ரீ கற்பக விநாயகர் தேவார மனனம் - 1ஆம் இடம் |
| 3. வி. பிரவணன் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம், தகவல் தொழில் நுட்பம் வலயமட்டம் 2ம் இடம் புலமை பரிசில் சித்தி வெட்டுப்புள்ளிக்கு மேல் 168 |

| | |
|---|---|
| 4. சு. பாவினியன் | கணிதம், சுற்றாடல், சமயம், புலமைப்பரிசில் சித்தி |
| 5. சு. சந்தோசனா | கணிதம், சமயம், சுற்றாடல், தமிழ், ஆங்கிலம், தமிழ்த்தினப் போட்டி - பாவோதல் வலயமட்டம் - 3ஆம் இடம் புலமைப்பரிசில் சித்தி |
| 6. பா. கேசிகா | தமிழ், சுற்றாடல், ஆங்கிலம், சமயம், புலமைப்பரிசில் சித்தி |
| 7. சி. புவின்சன் | கணிதம், சுற்றாடல் புலமைப் பரிசில் சித்தி |
| 8. து. றஜீசன் | புலமைப்பரிசில் சித்தி |
| 9. த. திலக்சனா | ஆங்கிலம், சமயம், புலமைப்பரிசில் சித்தி |
| 10. சி. அபிசேக் | புலமைப்பரிசில் சித்தி |
| 11. வி. விஷ்ணு | இணைபாடம் |
| 12. இ. டிசான் | இணைபாடம் |
| 13. அ. தேவப்பிரியன் | இணைபாடம் |
| 14. நா. மாதங்கி | இணைபாடம் |
| 15. ர. மானுஷா | விளையாட்டு மாகாணமட்டம் |
| 16. ற. திசானன் | இணைபாடம் |

**தரம் – 06**

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. ப. அக்ஷயன் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், தொழிநுட்பம், சுகாதாரம், புத்தாக்கம். |
| 2. இ. கிருத்திகன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், தொழிநுட்பம், சுகாதாரம், புத்தாக்கம். |
| 3. ச. றெஜிகா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, நடனம், தொழிநுட்பம், சுகாதாரம், சிங்களம் |
| 4. சி. அபிதா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, நடனம், தொழிநுட்பம் |
| 5. இ. றதுஷிகா | சமயம், தமிழ், கணிதம் |
| 6. நி. அஸ்வினி | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம் |
| 7. வே. சார்மி | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், தொழிநுட்பம் |
| 8. அ. டிலக்ஷனி | நடனம் |
| 9. ஜெ. திலக்சனா | தொழிநுட்பம் |
| 10. வ. வினுஜா | தமிழ், கணிதம், புவியியல், நடனம் |
| 11. சி. பிரியங்கா | இணைபாடம் |

## தரம் - 07

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. பி. கோபிராம் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், சித்திரம், தொழிநுட்பம், புத்தாக்கம் |
| 2. ரா. மேனகன் | கணிதம், சங்கீதம் |
| 3. மா. ஜெனுசியன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், தொழிநுட்பம், சுகாதாரம். புத்தாக்கம் |
| 4. ச. ஆருஷன் | இணைபாடம் |
| 5. இ. நிருஷிகா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, நடனம், தொழிநுட்பம், சுகாதாரம் |
| 6. ச. சாணுகா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, நடனம், தொழிநுட்பம், சுகாதாரம். |
| 7. அ. அபர்ணா | தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், குடியுரிமை, நடனம், தொழிநுட்பம். |
| 8. கு. சிந்தூரிஜா | தமிழ், ஆங்கிலம், கணிதம், சங்கீதம், தொழிநுட்பம். |
| 9. ம. சகானா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சங்கீதம், தொழிநுட்பம், சுகாதாரம் |
| 10. ஜெ. பிருந்தா | கணிதம், தமிழ் |

## தரம் - 08

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. ந. ஜெஸ்ரின் | குடியியல், P.T.S., சமயம், புத்தாக்கம் |
| 2. சி. சாரங்கன் | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம், P.T.S., சங்கீதம், குடியியல் |
| 3. சோ. அபர்ணன் | சமயம், விஞ்ஞானம், புவியியல், P.T.S., சங்கீதம் |
| 4. க. பிரணவராஜ் | விஞ்ஞானம், P.T.S. |
| 5. நி. றதீபா | சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல், விஞ்ஞானம், குடியியல், சுகாதாரம், P.T.S., சங்கீதம், மாகாண மட்ட விளையாட்டு |
| 6. சி. டிலக்சனா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், P.T.S., சங்கீதம். |
| 7. ஜீ. டல்சிகா | சமயம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், P.T.S., நடனம் |
| 8. து. சயிந்தா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், சுகாதாரம், P.T.S., சுகாதாரம், மாகாண மட்ட விளையாட்டு |
| 9. இ. அனுசா | சங்கீதம் |
| 10. அ. அபிநயா | சமயம், P.T.S., குடியுரிமை, சங்கீதம் |
| 11. ம. ஜெகபரன் | P.T.S., புத்தாக்கம் |
| 12. சி. பிரகாஷ் | இணைபாடம் |

## தரம் – 09

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. ஸ்ரீ. தர்சனன் | சமயம், தமிழ், தொழில்நுட்பம், சங்கீதம் |
| 2. ச. சுபானுஜன் | தொழில்நுட்பம் |
| 3. ச. கௌரிசன் | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், சங்கீதம், புத்தாக்கம் |
| 4. செ. சுஜீபன் | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம், சங்கீதம் |
| 5. அ. டில்றுக்ஷன் | கிறிஸ்தவம், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம், சங்கீதம், தொழில்நுட்பம், புத்தாக்கம். |
| 6. சு. அபிநயா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், நடனம்,தொழில்நுட்பம், கட்டுரை |
| 7. அ. அபினா | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, தொழில்நுட்பம், சுகாதாரம், நடனம் |
| 8. அ. சாருணி | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, தொழில்நுட்பம், சுகாதாரம், சங்கீதம், சிங்களம், கதை முன்வைப்பு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டார் |
| 9. ர. உஷாந்தன் | இணைபாடம் |

## தரம் – 10

| பெயர் | விபரம் |
|---|---|
| 1. இ. றதுஷன் | சங்கீதம் |
| 2. செ. யதுர்ஜன் | சங்கீதம் |
| 3. ச. பிரசாந் | சங்கீதம் |
| 4. வே. சார்மிஷன் | சங்கீதம் |
| 5. சி. அபிஷா | சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், வணிகம், விஞ்ஞானம், வரலாறு, நடனம், சுகாதாரம் |
| 6. யோ. சுபத்திரா | சங்கீதம் |
| 7. சி. நிந்துஜா | சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், நடனம், சுகாதாரம் |
| 8. லோ. வினோசியா | சங்கீதம் |
| 9. ம. ஜெனனி | சங்கீதம் |
| 10. பா. மதுமிதா | நடனம் |
| 11. பா. பர்ஷனா | சமயம், தமிழ், சங்கீதம், சுகாதாரம் |

## க.பொ.த. உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் விபரம்

| மாணவர் பெயர் | பெறுபேறு |
|---|---|
| 1. ரா. ராகவன் | 7A B C |
| 2. மா. மகிழினி | 5A B 3C |
| 3. பா. சிந்துஜா | 4A B 3C |
| 4. சோ. அபிசன் | 2A 5B C S |
| 5. ந. ஜெஸ்னிகன | A 3B 4C S |
| 6. க. நிவேதன் | 2B 4C 3S |
| 7. பு. சிந்துசா | B 2C 4S |

## 2018 தவணைப் பரீட்சைகளில் 3 தவணைகளிலும் 'OPTIMI' சான்றிதழ் பெற்ற மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிதி

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| 1. இ. கிருத்திகன் | 6 |
| 2. ச. றெஜிக்கா | 6 |
| 3. சி. அபிதா | 6 |
| 4. மா. ஜெனுசியன் | 7 |
| 5. சி. டிலக்ஷனா | 8 |
| 6. அ. சாருணி | 9 |
| 7. அ. அபினா | 9 |

## மனனப்போட்டி ஆத்திசூடி கொன்றை வேந்தன்

**தரம் - 01**

1. ச. லக்ஸ்வின்
2. ப. ஹவிஷன்
3. ஜெ. அகிசன்
4. ந. துபிசாந்
5. ந. சஸ்வித்
6. சி. அக்ஷயா
7. க. டனுஸ்ஹா
8. ப. அப்ஷரன்
9. சு. சுவேனிகா
10. பி. பிரவீனா
11. ச. அக்ஷயா
12. கு. கிரிஷோன்
13. வி. விதுசா
14. சு. கம்சிகன்
15. பா. தக்ஷிகா
16. இ. கிபிஷனா

**தரம் - 2**

1. நி. அகல்யன்
2. சு. தனோயன்
3. சு. சுமணன்
4. சி. கஸ்வின்
5. சி. டிஷான்
6. ப. புவிஷன்
7. நா. கோகுலபிரசாத்
8. நஜாத்
9. க. றெயின்ஹாட் மக்ஸ்வெல்
10. ஜெ. தமிழ்ப்பிரியா
11. க. ஹன்சிகா
12. சு. யொய்னா
13. கி. ஸ்ரெலா
14. ர. ஜெஸ்மிகா

## திருக்குறள் மனனம்

**தரம் - 03**

1. ஜீ. லபிசாந்
2. ச. சானுஜன்
3. தா. தண்சிகன்
4. ஜெ. கவிப்பிரியா
5. அ. அக்சயா
6. ச. சரணியா
7. ச. கம்சிகா
8. ர. அனுஜா
9. இ. பிரேன்சியா

**தரம் - 05**

1. செ. பத்மஜன்
2. கு. நிஷோன்
3. செ. செங்கயல்
4. ஜெ. திபிசா
5. ஜெ. குகப்பிரியா

**தரம் - 04**

1. ற. டிகாஸ்
2. இ. அருஷ்ரிகா
3. த. கஜான்சி
4. இ. டன்சியா

**தரம் - 06**

1. சு. சந்தோஷனா
2. பா. கேஷிகா

**தரம் - 08**

1. இ. நிருஷிகா
2. ச. சானுகா
3. கு. சிந்தூரிஜா
4. ம. சகானா

## அமரர் அம்பலவாணர் தரம் 5 புலமைப்பரிசில் நிதி பெறுவோர்

| சித்தி ஆண்டு | மாணவர் பெயர் |
|---|---|
| 2014 | செ. சுஜீவன் |
| 2016 | பி. கோபிராம் |
| 2018 | வி. பிரவணன் |

## பேராசிரியர் கோபன் மகாதேவா அமரர் வைத்தியை சீதாதேவி புலமைப்பரிசில் நிதி பெறுவோர்

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| 1. ரா. ராகவன் | உயர்தரம் - கணிதம் |
| 2. சோ. அபிசன் | உயர்தரம் - வர்த்தகம் |
| 3. க. நிவேதன் | உயர்தரம் - கலை |
| 4. மா. மகிழினி | உயர்தரம் - கலை |
| 5. பா. சிந்துஜா | உயர்தரம் - வர்த்தகம் |
| 6. ந. ஜெஸ்னிகா | உயர்தரம் - கலை |
| 7. பு. சிந்துசா | உயர்தரம் - கலை |

## திரு. செல்லத்துரை தவரட்ணம் புலமைப்பரிசில் நிதி பெறுவோர் விபரம்

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| 1. செ. ஜதுர்ஜன் | 11 |
| 2. ச. கௌரீசன் | 10 |
| 3. அ. அபர்ணா | 08 |
| 4. சி. பிரியங்கா | 07 |
| 5. சு. பாவினியன் | 06 |
| 6. து. ரஜிசன் | 06 |
| 7. பா. கேஷிகா | 06 |
| 8. இ. அனுஷா | 08 |

# தமிழ்த்தாய் வாழ்த்து

இராகம்:- மாண்டு தாளம்:- ஆதி

தான தனத்தன தான தனத்தன தான தனத்தன

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீச
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே

சக்தி பதிப்பகம் மீசாலை – 0773160464